கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின்
செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர்: திருமதி.மு.கோகிலா.,பி.இ.,

ந.க.எண்.4561/2022/அ6 நாள்.23.07.2024

பொருள்: கருணை அடிப்படையில் பணி நியமனம் - கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலகு - மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் அலுவலகம் - அலுவலக உதவியாளர் மு.கந்தசாமி(திரு) என்பவர் - 12.12.2022 பி.ப முதல் மருத்துவ இயலாமை காரணமாக ஒய்வு பெற்றது - அவரது மகன் க.குணசேகரன்(திரு) என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை ஆணையிடல்

படிக்கப்பட்டவை:

1. அரசாணை(நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ-1)துறை, நாள்:08.03.2023
2. குணசேகரன் (திரு) என்பவரின் விண்ணப்பம்.
3. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்.4561/2022/அ6 நாள்.04.07.2023
4. குணசேகரன் (திரு) என்பவரின் பணிப்பதிவேடு.

------

ஆணை:

கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலகில், மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து பணியிடையில் 12.12.2022 பிற்பகல் முதல் மருத்துவ இயலாமையினால் ஒய்வு பெற்ற திரு.மு.கந்தசாமி என்பவரின் மகன் திரு.க.குணசேகரன் என்பவருக்கு மேலே 3இல் படிக்கப்பட்ட கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறை ஆணையின்படி, கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணியிடம் வழங்கப்பட்டு தனியர் 06.07.2023 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். பார்வை 1இல் படிக்கப்பட்ட அரசாணையின் படி, தனியர் பணியில் இணைந்த நாளான 06.07.2023 முற்பகல் முதல் தனியரின் பணி இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் வரன்முறை செய்து இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

மேற்காண், ஆணை விவரம் குறித்து தனியரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ளுமாறும், பணிவரன்முறை முன்தேதியிட்டு செய்யப்பட்டதால் ஆண்டு ஊதிய உயர்வு, ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அதனை பெற்று வழங்குமாறும் மேட்டுப்பாளையம் வட்டாட்சியருக்கு ஆணையிடப்படுகிறது.

23/7

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
கோயம்புத்தூர் .

பெறுநர் :
திரு.க.குணசேகரன் த/பெ கந்தசாமி,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
மேட்டுப்பாளையம் வட்டம்.

23/7/24

நகல்:

1. வட்டாட்சியர், மேட்டுப்பாளையம்.
2. அ7 இருக்கைக்கு